Original Suit No.585/2018 நாள்: 04.03.2023

வா.சா1 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு பவல் லூம் தொழில். கடந்த 25 வருடங்களாக அந்த தொழிலைத்தான் நான் செய்து வருகிறேன். அது என்னுடைய தனிப்பட்ட தொழில் ஆகும். அதற்கு முன்பு விவசாயம் செய்தேன். கூலி வேலைக்குச் சென்றேன். என்னுடைய பிறந்த ஆண்டு 1972 தேதி மாதம் நினைவிலில்லை. எனக்கு நினைவு தெரிந்த நாள் முதலே 1 முதல் 4 பிரதிவாதிகளும், நானும் கூட்டுக்குடும்பமாக இருந்தோம். எனக்கு நினைவு எனது 11 வது வயதிலிருந்து தெரிந்தது. தாவா 3வது அயிட்டச் சொத்து 1ம் பிரதிவாதியால் எனக்கு நினைவு தெரிந்ததற்கு 18 ஆண்டுகளுக்கு முன்பே கிரையம் பெறப்பட்டது என்றால் ஆமாம். தாவா 1, 2, அயிட்ட சொத்துக்களில் வருமானம் கிடைத்தது என்பதை காட்டக்கூடிய வகையில் ஆவணங்கள் எதையும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தென்னிலை மேல்பாகம் கிராமம் சர்வே எண் 853, 854 ஆகிய தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களில் கிணறு எதுவுமில்லை என்றால் முன்பு கிணறு இருந்தது. இந்த விபரத்தை வழக்குரையிலோ சொத்து விவரத்திலோ சொல்லியிருக்கிறீர்களா என்றால் இல்லை. மேலும் கிணறு இருந்ததை காட்டக்கூடிய ஆவணங்களையும் நீதிமன்றத்தில் காட்டவில்லை என்றால் சரிதான். தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களில் விவசாயம் நடைபெற்றது என்பதை பொறுத்து ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆவணங்களை தாக்கல் செய்தால் அதில் விவசாயம் நடைபெற்றதா வருமானம் எவ்வளவு கிடைத்தது போன்ற விவரங்கள் தெரிய வந்திருக்கும் என்றால் சரிதான். தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களில் விவசாயமும் நடைபெறவில்லை அதில் வருமானமும் கிடைக்கபெறவில்லை ஆகவே தான் அதை பொறுத்து ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை கிராமத்தில் மூன்றாம் நபர்களின் நிலத்திலுள்ள மரங்களை வாங்கி வெட்டி விற்கும் தொழில் செய்து வந்தார் என்றால் இல்லை. என் தந்தை கறவை மாடுகள், ஆடு கோழி ஆகியவைகளை வைத்திருந்தார். அதில் அவருக்கு நல்ல வருமானம் கிடைத்ததா என்றால் நல்ல வருமானம் வந்தது அதை அவர் தனியாக வைத்துக் கொண்டார். அவர் தனிப்பட்ட முறையில் கிடைத்த வருமானத்தை கொண்டுதான் தாவா 3வது அயிட்ட சொத்தை வாங்கினார் என்றால் சரியல்ல. தனிப்பட்ட வருமானத்தை கொண்டு தான்

உங்கள் தந்தை உங்களையும், 2 முதல் 4 பிரதிவாதிகளையும் வளர்த்து ஆளாக்கினார் என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகள் எனக்கு அக்காக்கள் தான். அவர்களில் கடைசி அக்காவான 4ம் பிரதிவாதிக்கு 1992 அல்லது 1993ல் திருமணம் நடந்தது. ஏனைய 2, 3 பிரதிவாதிகளுக்கு அதற்கு முன்பே திருமணம் நடந்தது. 2 முதல் 4 பிரதிவாதிகள் திருமணத்திற்கு பின்னிட்டு முறையே அவர்கள் கணவர்களுடன் வெளியூரில் இருக்கிறார்கள். தற்சமயம் நானும், 1ம் பிரதிவாதியும் தனித்தனியாகத்தான் உள்ளோம். என் தாயார் என் தந்தையுடன் இருக்கிறார். எனக்கு 1992ம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பின்னிட்டு தனியாக குடும்ப அட்டை பெற்று தனிவீட்டில் குடியிருக்கிறீர்கள் என்றால் ஆமாம். சர்வே எண் 853/1, 854/1 ஆகிய சொத்துக்களை உங்கள் தந்தை உங்கள் பெயரில் கிரையம் வாங்கினாரா என்றால் நானும் எனது தந்தையான 1ம் பிரதிவாதியும் சேர்ந்து கிரையம் வாங்கினோம். கிரையத்திற்கான எனது பாகத்தொகையை தனிப்பட்ட தொழிலின் மூலம் கிடைத்த வருமானத்தை கொண்டு கொடுத்தேன். அந்த சொத்துக்களை பொறுத்து என் தந்தை கடந்த 07.09.2016ம் தேதி செட்டில்மெண்ட் பத்திரம் ஒன்றை எழுதிக் கொடுத்திருந்தார். சர்வே எண்.853/1ல் உள்ள சொத்தைப் பொறுத்து என் சகோதரி லட்சுமிக்கு நானும் என் தந்தையும் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறோம் என்றால் ஆமாம். இதைத்தவிர கடந்த 2001ல் கார்வழி கிராமம் சர்வே எண்.121/3ல் உள்ள சொத்தை நான் தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கியிருந்தேன். நீங்களும் உங்கள் சகோதரிகளும் திருமணமானதிற்கு பின்னிட்டு எக்காலத்திலும் உங்கள் தந்தையான 1ம் பிரதிவாதியுடன் கூட்டுக்குடும்பமாக வசிக்கவில்லை என்றால் சரிதான். தாவா 3வது அயிட்ட சொத்து உங்கள் தந்தையால் தனிப்பட்ட வருமானத்தைக் கொண்டு கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் தான் அதை அவர் 5ம் பிரதிவாதி பெயருக்கு 29.06.2018ம் தேதி செட்டில்மெண்ட்டாக கொடுத்துவிட்டாரா என்றால் செட்டில்மெண்ட் கொடுத்துவிட்டார் ஆனால் அது அவருடைய தனிப்பட்ட சொத்தில்லை. உண்மையில் 1 முதல் 4 பிரதிவாதிகளும் நீங்களும் கூட்டுக்குடும்பமாக இருந்திருந்தால் உங்கள் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்களும் கூட்டுக்குடும்பச்சொத்தாகத்தான் சேர்க்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து பாகம் பிரித்துக் கொள்ள ஆட்சேபணை இல்லை என்றால்

எனக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால் 3 வது அயிட்ட சொத்தையும் பாகம் பிரிக்க வேண்டும். தாவா 3 வது அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் அதில் உங்களுக்கோ 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கோ பாகம் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா 3 வது அயிட்ட சொத்தைப் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு

அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்துசெய்தார்.
(ஒம்/– R.கோகுல் முருகன்),
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.